### அத்தியாயம் 8

# அறிவு மற்றும் விக்கிரகங்களுக்குப்படைக்க ப்பட்டவைகள்

கொரிந்து சபை பவுலுக்கு, நல்லொழுக்கம் மற்றும் தீர்மானத்தைக் குறித்த ஒன்று அல்லது அனேக கேள்விகளோ, ஒரு கடிதம் எழுதியிருந்தது (7:1). கிரேக்க-ரோம பழக்கத்திலிருந்து, யூத மற்றும் கிறிஸ்தவ நல்லொழுக்கத்தை பிரித்திருந்த ஒரு பெரிய பிரிவினையைக் கொடுத்து, கிறிஸ்துவின் சபை போராடிக் கொண்டிருந்தது என்பதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. முன்பு அந்நிய தேவர்களின் விசுவாசிகளான இவர்கள், திருமணம், மெய்பற்று, மற்றும் குடும்ப ஜீவியத்தின் அவர்களின் தாக்கங்கள் மற்றும் விளைவுகளுக்கு அவர்களின் சிந்தனைகளை சரிபடுத்த வேண்டியிருந்தது. பட்சாதாபத்திற்கு அழைக்கப்பட்ட கிறிஸ்துவில் விசுவாசம், வாழ்க்கை முறைக்கு ஒரு பெரிதான மாற்றம். புறஜாதியாரின் நல்லொழுக்கம் இல்லாததன்மை அவர்களை பாழாக்குவதாக இருந்தது மற்றும் தேவனுக்கு அவமானமாக இருந்தது. இந்த பழைய பழக்கங்கள், சபையில் இருந்தவர்களுக்கு ஏற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது.

“குறித்த” என்பது கேள்விகளுக்கு பதிலளிக்கும் பவுலின் வழிகளாக இருந்திருந்தால், கொரிந்து சபையானது, விக்கிரக ஆராதனையை மற்றும் நல்லொழுக்கம் இல்லாத தன்மையை குறித்து உதவும்படி வேண்டிக் கொண்டிருப்பார்கள். 8:1க்குப் பிறகு, அடுத்து “குறித்த” என்ற வார்த்தை 12:1ல் தோன்றுகிறது. 11:2-34ல் உள்ளவைகள் எப்படியாக சந்தர்ப்பசூழலுக்கு பொருந்தும் என்பது பார்க்க கடினமாக இருந்தாலும் கூட, அதிகாரங்கள் 8 லிருந்து 11வரை அடிப்படை அக்கரை “விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்டவைகளை” குறித்ததாகும் (8:1, 4, 10).

பழங்காலத்தில், மதமானது, வாழ்வின் எல்லா தரப்பிலும் ஒன்றுக்கொன்று பிணைக்கப்பட்டிருந்தது. ஒரு நபரின் தொழில், குடும்ப வாழ்க்கை, ஓய்வு நேரம், சமுதாய பங்கேற்பு, மற்றும் அரசியலில் மத கூறு இருந்தது. ஒரு விக்கிரக ஆராதனை செய்பவன் கிறிஸ்தவன் ஆனால், அவனுடைய மதமாற்றம் அவனுடைய அந்த

நாளின் ஒவ்வொரு நொடியிலும் தாக்கம் உண்டாக்கியது. உதாரணமாக, ஒன்றாக உண்பது, இன்றைய ஜனங்களை போலவே, பழங்கால சமுதாய மற்றும் மத ஜீவியத்திற்கு ஒரு முக்கியமான பங்காக இருந்தது. கொரிந்திய விசுவாசிகளுக்கு அயலார், நண்பர்கள் மற்றும் குடும்பம், விக்கிரகங்களுக்கு படைத்ததை சாப்பிடுவதில் இருந்த வலுக்கட்டாயம் வலுவாக மற்றும் நிரந்தரமாக இருந்தது.

அந்நிய தேவர்களுக்கு படைத்ததை உண்ண வேண்டுமா இல்லையா என்ற கேள்வியில் கிறிஸ்தவர்கள் சந்தித்த போராட்டத்தை இன்றைய நாளில் யாருமே புரிந்துக்கொள்ள முடியாது. சமீப காலத்தில் தான் விக்கிரக ஆராதனை ஜீவியத்தை விட்டு வந்திருந்த இந்த சகோதரர்கள், அனுதினமும் அதிகப்படி அல்லது குறைந்த பட்சம் உள்ளார்ந்ததாக இருந்த விக்கிரக ஆராதனையில் நிலவின சூழ் நிலைகளை சந்திக்க வேண்டி இருந்தது. கீழ்க் கண்ட நான்கு சூழ்நிலைகள், வாசகர்கள், பவுலின் காலத்தில் கொரிந்துவின் சம்பிரதாய மற்றும் மத சூழ்நிலை என்னவாக இருந்தது என்று கற்பனை செய்து பார்த்து, பவுலின் வார்த்தைகளை நன்றாக புரிந்துக்கொள்ள உதவுகிறது.

*வணிக கூடுகையில் மாமிசம் உண்பது.* முதலில், நாம் ஒரு கைவினைஞர், ஒருவேளை கொல்லனை நாம் யூகிக்கலாம். அவன் தனது தொழிலை அவன் தகப்பனிடமிருந்து கற்றிருக்கலாம் மற்றும் காலம் செல்ல கொரந்திய *கொல்லர்* சங்கம், லத்தீன் மொழி பேசும் ரோமர்கள் அழைத்த வண்ணம் ஒரு கல்லூரியை சேர்ந்திருக்கலாம். அவன் மற்றும் மற்ற கொல்லர்கள் அவ்வப்போது, சந்தையைக் குறித்த அல்லது மூலப் பொருட்களைக் குறித்து செய்தியை பகிர்ந்துகொள்ள, மற்றும் வியாபாரத்திற்கு வசதியாக இருக்கும் கொள்கைகளை எல்லா நிலையிலிருக்கும் அரசாங்கத்தை பகுமுககூடம் செய்ய, ஒரு உணவு ஐக்கியத்திற்காக ஒன்று கூடியிருக்கலாம்.

இந்த சங்கத்தின் கூடுகை ஸ்தலமானது, உலோகத்தின் தேவருக்கு பிரதிஷ்டை செய்யப்பட ஆலயத்தின் சுற்றாடலில் இருந்த ஒரு உணவு அறையாக இருந்தது. அவன் கிரேக்கர்களுக்கு "Hephaestus" ஆக இருந்தான், ஆனால் ரோமர்களுக்கு "Vulcan" ஆக அறியப்பட்டான். சங்க கூட்டத்திற்கு முன்பு, ஒரு ஆடு அல்லது ஒரு பன்றி தேவருக்கு அற்பணிக்கப்பட்டது. அதனுடைய கொழுப்பு பாகத்தை பலிபீடத்தில் சுடப்பட்டது, மற்றும் மிருகத்தின் மாமிசம், கூட்டத்தின் ஆகாரத்திற்கு கொடுக்கப்பட்டது. கூடுகை, தேவரின் தயையை செஞ்சி சடங்குகளோடு கூடுகை ஆரம்பமானது. ஒருவேளை கொல்லர்கள், கடவுளுக்கு கொஞ்சமே கவனத்தை கொடுத்திருக்கக் கூடும், ஆனால் அனுதின வாழ்வின் விஷயத்தில், தெய்வீகமான உதவி இருப்பது நல்லது என்று அவன் நினைத்திருக்கலாம். சங்கத்தின் ஒட்டு மொத்தமான சத்தத்திலிருந்து தனது வியாபாரத்திற்கு கிடைத்த

ஆதாயத்தை குறித்து அவன் அறிந்தவனாக இருந்தான். சமீப காலமாக, அவன் கிறிஸ்தவனாக மாறியிருந்தான். சங்கத்தின் அங்கத்தில், அவனுடைய புதியதாக கண்டு கொண்ட விசுவாசத்தின் தாகத்தை சரி செய்யும் தருவாயில் அவன் இருந்தான். அவன் சேர்ந்திருந்த சங்கம் "ஒரு கடவுளோடு இணைந்திருந்தது, அடிக்கடி ஒரு ஆலயத்தில் சேர்ந்தது, வணக்கங்கள் மற்றும் பலிகளை செலுத்தினது, மற்றும் விக்கிரக ஆலயங்களிலிருந்து மாமிசத்தை உண்டது."[1] என்ற காரியத்தில் கேள்விகள் எழும்பினது. அவர்கள் ஒரு குழப்ப நிலையில் இருந்தார்கள். அவனை சங்கத்திலிருந்து வெளியேற்றுவது, ஒரு கம்பீரமான சமுதாய மற்றும் வணிக விளைவுகளை உண்டாக்கும்.

அறிவார்ந்து, Hephaestus என்பது ஒன்றும் இல்லை என்று அந்த கொல்லன் உணர்ந்து கொண்டான்; ஆனால் பல வருடங்களின் கலாச்சார சீரமைப்பு, அவன் அந்நிய தேவர்களுக்கு சம்பந்தப்பட்ட பழக்கங்களை நீக்க, அவனுக்கு கடினமாக இருந்தது. பவுலுக்கு அவனுடைய கேள்வி இவ்வாறாக இருந்தது: நல்ல வியாபாரம் என்று எடுத்துக் கொள்ளும்போது, பிதாவாகிய தேவன் மற்றும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு சமானமாக இருந்ததில்லை என்று அவன் புரிந்து கொண்ட படியினால், அவன் விக்கிரகத்திற்கு அந்த விக்கிரகத்தின் ஆலயத்தில் படைத்த மாமிசத்தை போஜனம் பண்ணலாமா? விக்கிரகம் என்பது ஒன்றும் இல்லை என்று, மற்றவர்கள் அறியாமல் இருந்தாலும் கூட, அவன் அறிந்திருந்தான். அவன் தன்னுடைய நண்பர்களோடு தொடர்பை துண்டித்து விட வேண்டுமா?

*சமுதாய கூடுகையில் மாமிசம் உண்பது.* இரண்டாவது சூழ்நிலை, ஒரு ஸ்திரீ தன்னுடைய நாற்பதுகளில் இருந்து எல்லா நேரத்திலும் பிள்ளைகள் அவளை கவனிக்காத அளவு வயதானவளாக இருக்கலாம். ஒரு சில ஆண்டுகளாக, அவள், வேறு சில ஸ்திரீகளோடு, கொரிந்தியில் உள்ள Demeter மற்றும் அவளுடைய புராண மகளான Persephoneக்கு பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆலயத்திலே அடிக்கடி கூடியிருக்கலாம். இரண்டுமே விவசாய கடவுளாக இருந்து அவர்கள் ஸ்திரீகளிடம் தயை உள்ளவர்கள் என்று நம்பப்பட்டது. கூடுகையானது ஒரு சமுதாய நிகழ்ச்சியாக இருந்தது. ஸ்திரீகள் கூடவே, கரி அடுப்பில் சமைத்த உணவை கொண்டு வந்து அவர்கள் தேவதைக்கு படைத்து, அவர்கள் சந்தித்திருந்த வீட்டு கொந்தளிப்பில் உதவும்படி மன்றாடி, அவர்கள் வீட்டை விட்டு சிறிது நேரம் சுகம் அனுபவித்தார்கள்.

இந்த ஸ்திரீயும் அவ்வண்ணமே, சமீப காலமாகத்தான் கிறிஸ்துவை அறிக்கையிட்டு ஞானஸ்நானத்தின் மூலமாக அவரை தரித்துக் கொண்டவராய் அவருக்கு கீழ்ப்படிந்திருந்தார்கள். கொல்லரை போலவே இவர்களுடைய நண்பர்களோடான கூடுதல் இருந்ததில்லை, ஆனால் அவருக்கும் அதே கேள்வி இருந்தது என்பதில் சந்தேகமேயில்லை. அவள் விக்கிரக ஆலயத்திற்கு சென்று,

அவளுடைய கிறிஸ்தவ அறிக்கையை சமரசம் செய்யாமல் விக்கிரகத்திற்கு படைத்ததை பகிர்ந்து கொள்ளலாமா? இப்பொழுது அவள் கிறிஸ்தவளாக இருந்தபடியால், விக்கிரகம் என்பது ஒன்றுமில்லை என்று அவளுக்கு தெரிந்திருந்தது. அவளுடைய சிநேகிதிகளோடு இன்னும் அவள் சந்திக்க விரும்பவில்லை என்று எப்படியாக எடுத்து சொல்லுவாள் என்பதில் அவளுக்கு குழப்பமாக இருந்தது. கிறிஸ்துவை அறிக்கை செய்வது, நீண்டகால தன்னுடைய சிநேகிதிகளிடமிருந்து பிரிய வேண்டுமா என்று அவள் பவுலிடம் கேட்க விரும்பியிருக்கலாம்.

*குடும்பத்தோடு மாமிசம் உண்பது.* மூன்றாவது சூழ்நிலையில், வீட்டிலே மாமிசம் உண்ண விரும்பும் ஒரு குடும்பத்தை எடுத்துக்கொள்ளலாம். அந்த நாட்களில், கொரிந்துவில் அனுதின உணவுக்காக மாமிசம் என்பது அரிதான ஒன்றாக இருந்தது, ஆனால், விசேஷித்த நாட்களில், குடும்பம் மாமிச சந்தைக்கு சென்று (μάκελλον, *makellon*; 10:25) ஒரு சிலதை வாங்கியிருக்கலாம். சந்தைகளுக்கு மாமிசம், அதிகப்படி அந்நிய தேவர்களின் ஆலயத்திலிருந்து வழங்கப்பட்டிருந்தது. ஒரு தேவரின் உதவி நாடி வரும் ஒரு புறஜாதியான், தேவாலயத்திற்கு, தேவருக்கு கொடுக்க ஒரு காணிக்கையாக, ஒரு ஆடு, பன்றி அல்லது ஒரு பசுவை கூட கொண்டு வந்திருக்கலாம். மிருகத்தை கொன்று, கொழுப்பை பலிபீடத்தில் சுட்டு, மீதியானதை வியாபாரிகளுக்கு விற்று அவர்கள் அதை சந்தைக்கு கொண்டு சென்றிருக்கலாம். பவுலுக்கு கொரிந்தியர் கேட்ட கேள்வி இதுவே: முன்பதாக ஒரு விக்கிரத்திற்கு படைக்கப்பட்டதை ஒரு கிறிஸ்தவன் குடும்ப பந்தியில் உண்ணலாமா?

*ஒரு நண்பனின் வீட்டிலே மாமிசம் உண்பது.* நான்காவது சூழ்நிலை மூன்றாவதை போலவே இருக்கிறது, ஆனால் இது வேறொரு கேள்வியை எழுப்புகிறது. இந்த சூழ்நிலையில் ஒருவர் வீட்டில் உண்பதை குறித்ததாக இருக்கிறது. கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள், ஒருவேளை குடும்ப அங்கத்தினர், அவர்களோடு கூட விருந்துக்கு அழைத்தால் எப்படி? ஒரு வேளை, விருந்தில் பரிமாறப்பட்ட மாமிசம், அந்நிய தேவர்களுக்கு படைக்கப்பட்டதாக இருக்குமோ என்ற சந்தேகத்தோடு கிறிஸ்தவர்கள் அவர்களோடு கூட உண்ண அந்த வரவேற்பை ஏற்றுக்கொள்ளலாமா? கிறிஸ்தவர்களின் தாக்கங்கள் மற்றும் அவர்களுடைய தேவன் மீதான நம்பகத்தன்மை, இப்பொழுது பிரச்சனையாக இருந்தது.

*சுருக்கவிளக்கம்.* ஒரு விக்கிரத்திற்கு படைக்கப்பட்ட மாமிசத்தை உண்ணுவதை குறித்த கேள்வி குறியாக, விக்கிரக ஆலயத்தில் மாமிசம் உண்ணுவது நுண்ணிய மெல்லிய மற்றும் மென்மையான நுட்பத்தை கொண்டிருந்தது. “ஆம்” அல்லது “இல்லை,” வெறும் “சரி” அல்லது “தவறு” என்ற பதில்களை, பவுல் அத்தகைய சந்தர்ப்பங்களில்

கொடுக்கவில்லை; ஆனாலும் புதிய விசுவாசிகளுக்கு தெளிவான வழிமுறைகள் தேவைப்பட்டது. ஏவப்பட்ட அப்போஸ்தலனாக தேவன் எந்த ஒரு குறிப்பிட்ட கட்டளையையும் கொடுக்காத பகுதிகளில், அவர் ஜாக்கிரதையான காரணங்களை சார்ந்து, அவர்களை வழிநடத்தினார். நிச்சயமாகவே, விக்கிரகங்களை விட்டுவிடும்படி, அதாவது விக்கிரக ஆலயங்களிலிருந்து விலகி இருக்கும்படி அவர் எல்லா கிறிஸ்தவர்களையும் கண்டித்தார், அவர்களை சுற்றிலும் இருக்கும் ஜனங்கள் கூட, அவர்களும் கூட அந்நிய சடங்குகளில் பங்கு கொள்கிறார்கள் என்ற எண்ணமே வர விடக்கூடாது.

சந்தையில் வாங்குவதை குறித்து, ஒரு மாமிசத்தை குறித்த வரலாறை கேட்காமல் இருப்பது ஒரு புத்திசாலித்தனமான அணுகுமுறையாக இருந்தது. கொடுக்கப்படுகிற மாமிசம், விக்கிரகங்களுக்கு படைத்தது என்று யாராவது சொன்னால், அப்பொழுது அந்த கிறிஸ்தவன், விக்கிரகத்திற்கு எதிராக ஒரு தவறில்லாத நிலையை எடுத்து கொண்டு அதை புசிக்க தன்னுடைய உரிமையை ஒத்திவைக்க வேண்டும்.

## அறிவு vs. அன்பு (8:1-3)

**[1]விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைக் குறித்த விஷயத்தில், நம்மெல்லாருக்கும் அறிவு உண்டென்று நமக்குத் தெரியுமே. அறிவு இறுமாப்பை உண்டாக்கும், அன்போ பக்தி விருத்தியை உண்டாக்கும். [2]ஒருவன் தான் ஏதேனும் ஒன்றை அறிந்தவனென்று எண்ணிக் கொள்வானானால், ஒன்றையும் அறிய வேண்டிய பிரகாரமாக அவன் இன்னும் அறியவில்லை. [3]தேவனில் அன்புகூருகிறவனெவனோ, அவன் தேவனால் அறியப்பட்டிருக்கிறான்.**

**வசனம் 1. விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட வைகளைக்குறித்த விஷயத்தில்** பேசின பின்பு, அப்போஸ்தலர், விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவைகளைக் குறித்து மென்மையான கடிந்து கொள்ளுதலினாலே தம்முடைய கருத்துக்களை தொடங்கினார். இது அவர்கள் கேட்ட கேள்வியினாலே அல்ல, அதினிமித்தம் அவர்களுக்குள் இருந்த மனோரீதிக்காகவே இருந்தது. விவாதம் அறிவுக்கு கவனத்தை செலுத்தினது. விக்கிரக ஆலயத்தில் விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட மாமிசத்தை உண்டவர்கள், அவர்களுடைய அறிவு அவர்கள் நடத்தையை நியாயப்படுத்தினது என்று நம்பினார்கள். ஆலய சுற்றாடலில் உணவு அறைகள் இருந்தது.[2] அந்த விருந்துகளில் பங்குகொண்ட கிறிஸ்தவர்கள், இந்த இடங்களில் உண்ணுவது, விக்கிரக ஆராதனை செய்வதற்கு முற்றிலும் வேறுபட்டிருந்தது என்று பார்த்தார்கள். விக்கிரகங்கள் அர்த்தமற்றது என்று அவர்கள் தெரிந்திருந்தபடியால், இந்த இல்லாத தேவர்களுக்கு

படைக்கப்பட்ட மாமிசத்தை உண்பதில் எந்த ஒரு தீங்கும் இல்லை என்றே அவர்கள் பார்த்தார்கள்.

பவுல் இதை ஒப்புக்கொள்ளவில்லை. **நம்மெல்லாருக்கும் அறிவு உண்டென்று நமக்குத் தெரியுமே** என்று அவர் எழுதினர். அவர் இங்கு சுட்டிக்காட்டின அறிவானது இதற்கு முன்பே 1:21 மற்றும் 2:1-13ல் அவர் சொல்லியிருந்த உலக பிரகாரமான ஞானமாக இருந்தது. “ஞானம்” மற்றும் “அறிவு” என்று கொரிந்தியர் தங்களை சொல்லிக் கொண்டது, அவர்களை “இறுமாப்படையும்படி” (காண்க 4:18, 19) செய்திருந்தது என்று பவுல் சொன்னார். வினைச் சொல்லின் ஏழு நிகழ்விலும் ஃபுசைஓ (*phusioō*, “இறுமாப்பை உண்டுபண்ணுவது”; வாஸ்தவமாக, “பொங்குவது”) புதிய ஏற்பாட்டின் 1 கொரிந்தியரில் ஆறு முறை தோன்றுகிறது. பவுல் கடிந்துகொண்ட அறிவானது, ஒரு சிலர் தொடர்ந்து விக்கிரக பழக்கங்களை கைக்கொண்டு அதை நியாயப்படுத்தினதற்காக இருந்தது.[3]

**அறிவு இறுமாப்பை உண்டாக்கும், அன்போ பக்திவிருத்தியை உண்டாக்கும்**, என்ற அப்போஸ்தலரின் கவனிப்பு, கொரிந்தியர் அன்பை புறக்கணித்து, அறிவை வளர்க்கவே தங்களை அற்பணித்திருந்தார்கள் என்று சுட்டிக்காட்டுகிறது. அன்பு மற்றும் அறிவு மற்றும் இவ்விரண்டிற்கும் உள்ள உறவுகள், இவைகள் அப்போஸ்தலரின் வழிமுறை கூறுதலின் அடிப்படை அம்சமாக இருந்தது. ஆகிலும், சர்ச்சை முழுவதிலும், இயேசுவை கிறிஸ்து என்று அறிக்கை செய்தவர்கள், எந்த வகையிலான விக்கிரக ஆராதனையும் சகிக்கதகாதது. David E. Garland சொல்வது போல, “விக்கிரக ஆலயங்களில் ஆராதனை, விக்கிரக பண்டிகைகளில் பங்கேற்பு, அல்லது விக்கிரக சம்பந்தமான விருந்தில் உண்பது”[4] என்பது கிறிஸ்தவர்கள் இனி செய்யக்கூடாது என்று பவுல் முழுவதுமாக எதிர்ப்பார்த்தார் என்பது உண்மையே.

விக்கிரக ஆராதனையோடு சமரசம் செய்தவர்களை பவுல் உறுதியாக கண்டித்தார். கிறிஸ்தவர்கள் அறிவில் பலனடைந்தவர் களாக இருப்பதாக கருதி, அவர்கள் விக்கிரகங்களுக்கு படைத்தவைகளை உண்டு பாவத்திற்கு தடை காப்பருதி பெற்ற அவர்களை பவுல் புகழவில்லை. பவுல் பெலமுள்ள கிறிஸ்தவர்கள் மற்றும் பெலவீனமான கிறிஸ்தவர்கள் இடையில் மத்திய சத்தத்திற்கு விடவில்லை. எல்லோரும் விக்கிரக ஆராதனையை விடவேண்டும் என்று அவர் கடிந்து கொண்டிருந்தார்.

8:7-13ல் அப்போஸ்தலர் பெலவீன கிறிஸ்தவர்கள் என்று சொல்லுதலில், அவர் அவர்கள் விக்கிரகராதனையின் ஆலயத்தில் விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டதை உண்ணும் சக கிறிஸ்தவனை பார்க்கையில் அவர்களுடைய விசுவாசம் ஆபத்தாகி விடும் விசுவாசிகளாக, பார்த்தார். அத்தகைய பாவம் சாத்தியமானதாக

இருந்தது என்பதே பவுலின் பாரமாக இருந்தது (காண்க 8:11). *இந்த சூழலில் அவர் யாரையும் "பலப்பட்டவர்" என்று அழைக்கவில்லை, மற்றும் அவர் விக்கிரக ஆலயத்தில் புசித்தவர்களுக்கு எந்த ஒரு அனுமதியும் கொடுக்கவில்லை.*

பவுலின் சர்ச்சை அவிழுகையில், அவருடைய அக்கரை கொள்ளுதலின் குறிப்பிட்ட பாரம் இன்னும் அதிகம் தெளிவானது. விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளை உண்ண அவரது ஆட்சேபனை, ஒருமுறை **விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட** மாமிசத்தில், புசிக்கிறவர்கள் மீது அசுத்தாவியின் வல்லமை இருந்தது என்று சொல்லுவதில்லை (10:19, 20). தனிப்பட்ட குடும்பத்தில் அத்தகைய ஆகாரத்தை உண்ணுவது, உதாரணமாக, அது எங்கிருந்து வந்தது என்று யாரும் கவனிக்காமல் இருக்குமளவும் அங்கீகரிக்கப்பட்டதாக இருந்தது (10:27). மாமிசம் உண்ணுவதோ அல்லது, "விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட" மாமிசத்தை உண்ணுவது பவுலின் பாரமாக இருக்கவில்லை; ஆனால் கொரிந்தியர் அத்தகைய ஆகாரத்தை ஒரு கடவுளுக்கு பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆலயத்தில் புசித்ததற்காக கொரிந்தியரை கடிந்து கொண்டிருந்தார் (8:10). ஒரு விக்கிரத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆகாரம் விக்கிரக ஆலயத்தில் புசிக்கும்போது, விசுவாசி எவ்வளவு அறிவுள்ளவன் என்று கூறினாலும், அந்த செயலானது இயல்பாகவே விக்கிரகாராதனையாக இருந்தது.

ஒரு கிறிஸ்தவன் அந்நிய தேவர்களை புறக்கணித்து, அலட்சியமாக தான் உண்ணும் உணவு "விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகள்" (εἰδωλόθυτον, *eidōlothuton*) என்று முத்திரை குத்தலாம். இருப்பினும், தேவர்களை பிரதிஷ்டைசெய்த ஒரு ஆலயத்தில், ஒரு கிறிஸ்தவன் இருப்பது, அவன் பரிசுத்த ஆகாரத்தை உண்டு கொண்டிருப்பது மற்றும் விக்கிரக ஆராதனையில் பங்குகொள்ளுவதை அறிக்கையிடுகிறதாக இருக்கிறது. இந்த செயல் ஒரு விக்கிரக ஆராதனை செய்பவர்களின் செயல் போலவே இருந்தது, மற்றும் அறிவின் அடிப்படையில் வேறுபாட்டை செய்ய முடியாது (காண்க 8:11). பவுலை பொறுத்தவரை, பக்திவிருத்தியை தரும் அன்பானது, எந்த ஒரு சூழ்நிலையிலும், ஒரு கிறிஸ்தவன் விக்கிரக ஆலயங்களில் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட மாமிசத்தை புசிக்க அனுமதிக்காது (8:10).

**வசனம் 2.** விக்கிரக ஆலயங்களுக்கு அவ்வப்போது சென்றுகொண்டிருந்த கொரிந்தியரை திருத்தும் வகையில், உண்மையாகவே அறிவுள்ளவர்கள் தங்கள் அறிவின் எல்லையை உணருபவர்களே என்று பவுல் அறிக்கை செய்தார். ஏற்கனவே, அவர் பிரிவினைக்கு மூலம் பெருமையுள்ள ஞானமே என்று அவர் வரையுறுத்தியிருந்தார் (அதிகாரங்கள் 2; 3). விக்கிரக ஆராதனையோடு

சமரசம் செய்துகொண்டிருந்தவர்கள் தாங்கள் சொன்ன அறிவானது, இதற்கு முன்பதாக உரையாற்றியிருந்த ஞானத்திற்கு சரிசமானமாக இருந்தது. முன்பதாக, அப்போஸ்தலன், "மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே" பேசவில்லை என்று சொல்லியிருந்தார் (2:13; காண்க 1:26-31). தங்கள் அறிவின் பேரில் உயர்ந்த மதிப்பு இருந்த கொரிந்தியருக்கு, அப்போஸ்தலன் பவுல், **ஒருவன் தான் ஏதேனும் ஒன்றை அறிந்தவனென்று எண்ணிக்கொள்வானானால், ஒன்றையும் அறிய வேண்டிய பிரகாரமாக அவன் இன்னும் அறியவில்லை** என்று சொன்னார். பவுலின் அப்போஸ்தல அறிவானது, அவர்களின் அறிவை விட வேறுபட்டது என்று அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டி இருந்தது.

மற்றவர்களை மதிக்காமல், அவர்கள் அறிவுள்ளவர்கள் என்ற காரணத்தை காட்டுபவர்கள் அகந்தை உள்ளவர்கள் மற்றும் ஆவிக்குரிய அறியாமையுள்ளவர்களாக இருக்கிறார்கள். "அறிய வேண்டிய பிரகாரமாக [அவன்] இன்னும் [அறிய] வில்லை" என்பது, மனுஷ அறிவானது, இயற்கையாகவே நிச்சயமில்லாததாய் இருக்கிறது என்று கண்டு கொள்கிறது. நிறைவான அறிவு தேவனின் அதிகாரமாக இருக்கிறது. நாம் அறிந்துகொள்ளும் ஒரு உண்மையானது தேவனால் பேசப்பட்டது மட்டுமே. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிரிட்டிஷ் எழுத்தாளர், William Cowper, "அறிவு என்பது தான் அதிகம் கற்றுக் கொண்டுள்ளேன் என்பதின் பெருமையாக இருக்கிறது; ஞானம் என்பது தனக்கு ஒன்றும் தெரியாது என்னும் ஒரு தாழ்மையாக இருக்கிறது."[5] என்று சொன்னார். மனோதத்துவத்தை போலவே, அறிவானது ஒரு சிகிச்சை பெறக்கூடிய ஒரு வியாதியாக இருக்கிறது.[6]

**வசனம் 3. தேவனில் அன்புகூரும்**, ஒரு விசுவாசி, **தேவனால் அறியப்பட்டவனாக** இருக்கிறான், ஆனால் அறிவை குறித்த பெருமையின் நிலைப்பாடு உள்ளவன் அல்ல. NASBயிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட வாசகம் சரியாக இருந்தால், ஒரு கீழ்ப்படியும் விசுவாசி, தேவன் தன்னை அறிந்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக தான் தேவனை அறிந்துக் கொள்ள அதிகம் அன்புகூரமாட்டான். கிறிஸ்தவனில் அன்பின் பழக்கமானது அவன் பேரில் தேவனுடைய அன்பிற்கு சான்றாக இருக்கிறது. ஆவியில் நடத்தப்பட்ட அப்போஸ்தலன் புரிந்து கொண்டபடி, மனித வாழ்க்கையின் இலக்கானது, ஒரு மனிதனுக்கு கனத்தையும் மற்றும் இலாபத்தையும் பெற்றுத் தரும் அறிவல்ல.

மேலே கண்ட வியாக்கியானத்திற்கு ஒரு மாறுபட்ட வியாக்கியானம், "தேவன்" (τὸν θεόν, *ton theon*) மற்றும் "தேவனால்" (ὑπ' αὐτοῦ, *hup' autou*) என்ற வார்த்தைகள் கொரிந்தியரின் முதலில் இருந்த பிரதிகளிலிருந்து மதிக்கப்பட்டிருந்த மற்றும் இரண்டாம் நூற்றாண்டின் அலெக்சாண்டரிய அறிஞர் Clement கொடுத்த இந்த வசனத்தின் வாசகத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இந்த

வார்த்தைகளின் விடு படுதல், பவுலின் காரணப்படுத்தும் வரிகளுக்கு அதிக உறுதியானதாக இருக்கிறது. வார்த்தைகளை விட்டு விட்டு, மத்திய வார்த்தையாக ἔγνωσται (*egnōstai*) எடுத்துக் கொள்ளும் போது: “ஒருவன் அன்பு கூர்ந்தால், இவன் உண்மையாகவே தெரிந்திருக்கும்” என்ற மொழியாக்கத்தை கொடுக்கிறது. செயலற்ற வார்த்தையில் புரிந்துகொண்டால், “ஒருவன் அன்பு கூர்ந்தால், இவன் உண்மையாகவே அறியப் படுகிறான்” என்று சொல்லுகிறது. இந்த வாசகம் முறையிடுவதாக இருக்கிறது; ஆகிலும், கையெழுத்துப் பிரதிகள் சாட்சியங்கள் நீண்டு வாசிக்க உதவுகிறது. கொடுக்கப்பட்ட வாசகத்தை அங்கீகரிப்பது ஆபத்தானதாக இருக்கும் ஏனெனில் அது ஒரு நூதனமான சிந்தனையைக் கொடுக்கிறது.

## தேவன் எதிராக விக்கிரகங்கள் (8:4-6)

**4விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைப் புசிக்கிற விஷயத்தைப்பற்றி, உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லை யென்றும் ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லையென்றும் அறிந்திருக்கிறோம். 5வானத்திலேயும் பூமியிலேயும் தேவர்கள் என்னப்படுகிறவர்கள் உண்டு; இப்படி அநேக தேவர்களும் அநேக கர்த்தாக்களும் உண்டாயிருந்தாலும், 6பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக் கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசுகிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது, அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம்.**

**வசனம் 4.** கொரிந்தியர்களை அறிவு மற்றும் அன்பின் ஒன்றோடொன்று இருக்கும் உறவை கருதும்படியான சவாலை விடுவித்து, பவுல் சர்ச்சைக்கு ஒரு அஸ்திபாரத்தை போட்டார். பிறகு அவர் சர்ச்சைக்குரிய விஷயத்திற்கு திரும்பினார்: விக்கிரக ஆலயத்தில் விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவைகளை புசிப்பது. அவர் அந்த உணவே **விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவைகள்** (*eidōlothuton*) என்று குறிப்பிட்டார், ஆனால் ஒரு புறஜாதி பக்தன் அதை, “தெய்வத்திற்கு கொடுத்த பலி [ἱερόθυτον, *hierothuton*]”[7] என்று சொல்லியிருப்பார்கள். பவுலின் காரணம் சொல்லுதலை புரிந்து கொண்ட ஒரு புறஜாதியான் எரிச்சலுற்றிருப்பான், அல்லது அது தெய்வீகமானது என்பதை நிராகரித்ததினாலே ஒரு வேளை கோபங்கொண்டிருப்பான். புறஜாதியார் ஆலயத்தில் ஒரு மிருகத்தை வதைப்பது, அதினுடைய மாமிசத்தை பரிசுத்தப்படுத்துவதில்லை என்று அப்போஸ்தலன் தெரிந்திருந்தான். ஒரு நல்ல யூதன் அல்லது ஒரு கிறிஸ்தவன் விக்கிரகத்தை, ஆலயங்களில் “விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவை,” மற்றும் விக்கிரக ஆராதனை குறித்து மட்டுமே

அவமதிப்போடு பேசுவார்கள்.

நிச்சயமாகவே, பவுல் கொரிந்தியர் பறைசாற்றிக் கொண்டிருந்த அறிவை பகிர்ந்திருந்தார். ஒரு அந்நிய தேவருக்கு ஒரு மிருகம் பலி செலுத்தப்பட்டால், அது ஒன்றுக்குமே படைக்கப்படவில்லை. அந்த தேவன் புறஜாதியாரின் கற்பனையின் கற்பனைக்கதையாக, விக்கிரகங்களின் பக்தரின் ஆவிக்குரிய அறிவின் மையாக இருந்தது. அத்தகைய தேவர்கள் இந்த **உலகத்தில்** இல்லவே இல்லை என்று பவுல் வலியுறுத்தினார். விக்கிரகங்களை சேவித்தவர்கள் நடுவில் சாத்தானின் வல்லமைகள் மற்றும் வான மண்டலத்தின் பொல்லாத ஆவிகள் கிரியை செய்தது என்று அவர் அறிந்துகொண்டார் (10:20; காண்க கொலோ. 1:16). ஆகிலும், "இந்த உலகத்தில்" தனிப்பட்ட முறையில் இருந்ததில்லை; இவைகள் வக்கிரமான மனதின் சிருஷ்டிப்பாக இருந்தது.

புறஜாதி தேவர்கள் இருந்ததில்லை; ஒரு தேவன் மட்டுமே என்றென்றைக்கும் இருந்தார். யூதரின் மூலம் ஷேமமாக இருந்தது: "இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்!" (உபா. 6:4). சங்கீதக்காரன் அதை வேறுபடுத்தி சொன்னது, "நம்முடைய தேவன் பரலோகத்தில் இருக்கிறார்; தமக்குச் சித்தமான யாவையும் செய்கிறார். அவர்களுடைய விக்கிரகங்கள் வெள்ளியும் பொன்னும், மனுஷருடைய கைவேலையுமாயிருக்கிறது" (சங். 115:3, 4). Josephus இவ்வாறாக எழுதினார்,

> எவ்வளவு அதிக விலையேறினதாக இந்தாலும், அவருக்கு ஒரு சொரூபத்தை செய்ய அவர்கள் தகுதியற்றவர்கள்; அவர் குறித்து எண்ணத்தை விவரிக்க எல்லா கலையும் கலையற்றதாக இருக்கிறது. அவரை போல ஒன்றை நாம் பார்க்கவும் யோசிக்கவும் முடியாது, அல்லது அவரைப் போல ஒன்றை உருவாக்க, பக்தியுள்ளதாக இருக்காது.[8]

**வசனம் 5. தேவர்கள் என்னப்படுகிறவர்கள்** ஏமாற்றப்பட்ட ஜனங்களால் கண்டுபிடிக்கப்பட்டதாக இருக்கிறது. புறஜாதியார் தங்களின் அறிவின்மையால் ஒரு சில தேவர்களை **வானத்திலும்** மற்றும் ஒரு சிலரை **பூமியிலும்** வைத்தார்கள். ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் அவைகள் பதுக்கப்பட்டது. குறுக்கு தெருக்களில் Hermes க்காக சின்ன சன்னதிகள் வைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு தோப்புக்கள், ஒவ்வொரு நீருற்று, மற்றும் ஒவ்வொரு வீட்டின் அடுப்பாங்கரைக்குள்ளும் அதனுடைய மங்கைகள், சட்டேர்ஸ், ஆவிகள், மற்றும் பேய்கள் இருந்தது. கிரேக்க புராணங்கள் ஒலிம்பிக்ஸ் தேவர்களை மலை உச்சியில் அல்லது வானங்களில் வைத்தது. குறைந்தது ஒரு சில கொரிந்திய கிறிஸ்தவர்கள் இந்த தெய்வீக கிரேக்க கருத்துப்பாங்குகளில் பழக்கப்பட்டிருந்தார்கள். கிரேக்க-ரோம கலாச்சாரத்தின் **அநேக தேவர்களையும் அநேக கர்த்தாக்களையும்**

சேவித்த அவர்கள் பூர்வகாலத்திலிருந்து திரும்புவது என்பது கடினமானதாக இருந்தது.

**வசனம் 6.** விக்கிரக ஆலயங்களில் விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவைகளை புசிப்பது குறித்து எந்த ஒரு முடிவுக்கு இந்த கிறிஸ்தவர்கள் வந்திருந்தாலும், அவரால் தேவனின் ஒன்றுத் தன்மையின் அவசியத்தின், விக்கிரகங்கள் ஒன்றுமில்லை என்ற அவசியத்தின், மற்றும் விக்கிரக ஆராதனைக்காரர்கள் தாங்கள் சிருஷ்டித்த தேவர்களில் உற்சாகத்தின் வெளிச்சத்தில் தங்களின் நடத்தைகளை மதிப்பிட வேண்டி இருந்தது. விக்கிரகங்களை சேவித்தவர்கள் வேறுபட்டு, கிறிஸ்தவர்கள் பிதாவாகிய **ஒரே தேவன்** உண்டு என்று அறிந்திருந்தார்கள். இயேசு கிறிஸ்துவின் **பிதாவாகிய** தேவனே, சகலத்தையும் படைத்தவர் என்ற பவுலின் போதனை பழங்காலத்தின் தெய்வீகத்தை குறித்த சந்தேகத்திற்கு ஒரு சவாலாக இருந்தது. தேவனின் ஒன்றுத்தன்மை என்பது யூத மத மற்றும் கிறிஸ்தவ மதத்திற்கு ஒரு அடிப்படையாக இருந்து, அதை திரும்ப கூறுவதாக இருந்தது (காண்க 8:4). அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசுகிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவராலே **சகலமும் உண்டாயிருக்கிறது அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம்.**

வேதாகம அறிவின்படி தேவனே சிருஷ்டிகர் என்பது மிக முக்கியமானதாக இருக்கிறது, ஆனால் தர்க்க சாஸ்திரம், தேவன் ஒருவராக இருக்கிறபடியால் அவரை சிருஷ்டிகராக ஒப்புக் கொள்ளுவதில்லை. தேவர்கள் அகிலத்தின் ஒரு தயாரிப்பாக இருந்தது, சிருஷ்டிகரின் தயாரிப்பு அல்ல என்று பழங்காலத்தினர் ஊகித்தார்கள். *Enuma Elish* ("உயரத்தில் இருக்கும்போது" என்ற பொருள்) என்ற பழங்கால அக்காடியன் சிருஷ்டிப்பின் புராணமானது, அனாதி காலத்து கோழையிலிருந்து தேவர்கள் வந்தார்கள் என்று ஊகிக்கிறார்கள். மனித குலத்திற்கு தகப்பன்மார்கள் மற்றும் தாய்மார்களாக இருப்பதிலும் அதிகமாக, இந்த தேவர்கள் தங்களை சேவிக்கும் படியான ஜாதிகளை உருவாக்கினார் என்று நம்பப்படுகிறது. அக்காடியன் புராணத்திலிருந்த தேவர்கள் சலன புத்தியுள்ளவர்களாக இருந்து, மனித பாடுகளை விட வித்தியாசப்பட்டதாக இருந்தது.[9] இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனே, சகலத்தையும் படைத்தவர் என்ற பவுலின் போதனை பழங்காலத்தின் தெய்வீகத்தை குறித்த சந்தேகத்திற்கு ஒரு சவாலாக இருந்தது.

பவுலின் எண்ணத்தில் விக்கிரகங்களானது, மனித கற்பனையின் ஒரு தயாரிப்பாக இருந்தது. அவைகள் அகந்தை மற்றும் அறிவின்மையினாலே உண்டானது. இஸ்ரவேலின் தேவனை பற்றிய அறிவின் மூலாதாரம், தேவனின் சுய வெளிப்பாட்டில் இருந்தது.

பிதாவாகிய தேவனை தேசங்களின் தேவர்களுக்கு ஒப்பிட்டு பார்க்க அல்ல. ஒரு பட்சபாதமில்லாத தேவனாக, அவர் இஸ்ரவேலை மற்றும் தேசங்களை ஒன்று போலவே நேசித்தார் (அப். 10:34; ரோமர் 2:11). தேவன் எல்லா ஜீவன்களையும் போஷித்து காப்பாற்றுகிறார்; அவர் மூலமாய் **நாமும் உண்டாயிருக்கிறோம்.**

தேவனின் ஒன்றுத்தன்மையை சமரசம் செய்யாமல், பவுல் **இயேசுகிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும்** என்று சொல்லி முன்னேறுகிறார். இயேசு கிறிஸ்துவின் கர்த்தத்துவம் என்பது தேவனுடைய ஒன்றுத்தன்மையிலிருந்து எந்த வகையிலும் திசை திருப்புவதில்லை. எல்லாவற்றிற்கும் மூல காரணர் நம் தேவனாக இருக்கிறார், ஆனால் அதை இயேசு கிறிஸ்துவை குறித்து சொல்லுவதும் சரியாக இருக்கும், “அவராலே சகலமும் உண்டு.” பிதாவைக் குறித்து எதை சொன்னாலும் அதை குமாரனுக்கும் சொல்லக்கூடும். மனித குலம் தேவனுக்காக இருக்கிறது என்று சொல்லுவது சரியாக இருக்கிறபடியால், “கிறிஸ்து மூலமாக நாமும் இருக்கிறோம்” என்று சொல்லுவது கூட உண்மையாக இருக்கும். புதிய ஏற்பாடு “திரியேக” என்ற வார்த்தையை உபயோகிக்காதிருப்பதால், அத்தகைய கருத்து தேவையானதாக இருக்கிறது. புதிய ஏற்பாடு தேவனுக்கு மட்டுமே வைக்காமல், கிறிஸ்துவுக்கு பரிபூரண ஸ்தோத்திரத்தை செலுத்துகிறது. ஆதியிலிருந்தே இயேசு தேவனாக இருக்கிறார் (யோவான் 1:1). தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம். அவருக்குள் வாசமாயிருக்கிறது (கொலோ. 2:9).

தேவனின் கிறிஸ்துவை ஒரு உருமாறிய விவரணையில் கொடுக்க பவுல் முற்படுகிறார்; அவர் ஞானத்தில் உருவகப் பட்டிருக்கிறார். இந்த ஒரு உருமாற்றத்தை கொலோசெயர் 1:15-17ல் தெளிவாக பார்க்கலாம். இயேசுவை குறித்ததான பவுலின் சித்தரிப்பு, பழைய உடன்படிக்கையில் ஞானத்தின் சித்திரத்தில் சார்ந்திருக்கிறது, குறிப்பாக நீதி மொழியில். விமர்சகர்கள் இந்த உருவகத்தை “பெண் ஞானம்”[10] என்று குறிப்பிடுகிறார்கள். இயேசுவை குறித்த சத்தியங்களை நிழலாட்டமிடும் வார்த்தை களில், ஞானம் அறிக்கை செய்யப்பட்டது, “கர்த்தர் தமது கிரியைகளுக்கு முன் பூர்வ முதல் என்னைத் தமது வழியின் ஆதியாகக் கொண்டிருந்தார். பூமி உண்டாகுமுன்னும், ஆதி முதற் கொண்டும் அநாதியாய் நான் அபிஷேகம் பண்ணப்பட்டேன்” (நீதி. 8:22, 23). பவுல் ஞானத்தின் குணாதிசயங்களை, “அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர். ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது” (கொலோ. 1:15, 16) என்று கூறுகையில் நசரேயனாகிய இயேசுவின் நபரில் மாற்றினார். ஞானத்தை போலவே இயேசு ஆதியிலிருந்து இருக்கிறார்; மற்றும் ஞானத்தை போலவே, அவர் மூலமாகவே சிருஷ்டிப்பு நடந்தது.

பவுல், இந்த கடிதத்தை பெறுபவர்களோடு அவர் பகிர்ந்து கொண்ட அறிவை சுட்டிக்காட்டியபடி, தான் 8:1ல் கொடுத்த அம்சத்தை அடிக்கோடிட்டார். விக்கிரக ஆராதனை செய்வதில் இருக்கும் நம்பிக்கையற்ற தன்மை மற்றும் அறிவின்மையை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும். விக்கிரத்திற்கு படைத்த ஆகாரத்தை உண்பது, ஒருவேளை விக்கிரக கோவில்களில் நடத்தப்படும் விக்கிரகங்களுக்கு சம்பந்தப்பட்ட சடங்காச்சாரங்களில் பங்கு கொள்வது (8:10) என்பது, விக்கிரகங்கள் என்றும் ஒன்றில்லை என்று தெரிந்தவர்களுக்கு எந்த விளைவும் ஏற்படுத்தாது என்பது உண்மையே. ஆகிலும், கிறிஸ்தவர்கள் மட்டுமே தனியாக வாழ்வதில்லை; ஒவ்வொருவனும் விசுவாச சமுதாயத்திற்கு பங்களிக்கிறான் என்று அப்போஸ்தலர் சுட்டிக்காட்டினார். “ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக் கிறோம்” (ரோமர் 12:5) என்று பின்பு அவர் எழுதினார். பவுலின் கடிந்து கொள்ளுதலில் இன்றைய கிறிஸ்தவர்கள் கற்றுக் கொள்ள வேண்டியதிருக்கிறது. பாவ மன்னிப்பில் பங்குபெறுதல் மற்றும் நித்திய ஜீவனின் நம்பிக்கை என்பது கர்த்தராகிய இயேசுவை தன் இருதயத்தில் ஏற்றுக்கொள்ளுவதைக் காட்டிலும் சிறந்ததாக இருக்கிறது. இந்த ஆதாயங்கள், ஒரு சமுதாயத்தில் வாழும் பொறுப்பிலிருந்து வருகிறது. தனிப்பட்டவர்களின் நடத்தையின் விளைவு முழு சரீரத்தையும் பாதிக்கிறது.

## அறிவு மற்றும் அதனுடைய வரம்புகள் (8:7-13)

அறிவானது, முக்கியமானதாக இருந்தாலும் கூட, அது அன்பை நியமிப்பதில்லை (8:1) என்று ஏற்கனவே பவுல் வலியுறுத்தி யிருந்தார். அறிவை சார்ந்திருப்பது எவ்வாறாக அன்பை விட மேலோங்கும் என்று நிரூபிக்க வேண்டி இருந்தது. விக்கிரகத்திற்கு படைக்கப்பட்ட மாமிசத்தை புசிப்பதின் நியாயப்படுத்துதலில் எப்படியாக கிறிஸ்தவர்கள் அறிவை சார்ந்திருந்தது, அவர்களுடைய சகோதர அன்பின் விலைக்கிரயத்தில் அதை செய்தார்கள். அவர் அவர்களை கடிந்துகொண்டார், ஏனெனில் கிறிஸ்தவனாக இருப்பது, இயற்கையாகவே ஒரு சமுதாய விவகாரமாக இருக்கிறது. வேறுபடுத்தப்பட்ட, தனிப்பட்டு நின்ற கிறிஸ்தவனை புதிய உடன்படிக்கை அறிந்ததில்லை.

ஒரு சமுதாயத்தில், வேறு விசுவாசிகளோடு கூட பங்கேற்காமல் ஒருவரும் “கிறிஸ்துவுக்குள்” இருக்க முடியாது. கிறிஸ்துவின் சீஷர்கள் மொத்தமாக அவருடைய சரீரமான சபையாக இருக்கிறார்கள் (எபே. 1:22, 23). சபையிலிருந்து வேறுபட்ட ஒரு கிறிஸ்தவன் மரத்திலிருந்து வெட்டப்பட்ட கிளையைப் போல இருப்பான் (யோவான் 15:1-6); அது பலன் கொடுக்க முடியாது. ஆதலால், ஒரு விசுவாச விக்கிரக கோவில்களில் உட்கார்ந்தபோது, அவனுக்கு அறிவு இருக்குமா

இல்லையா என்பது மட்டுமே கருதப்படாது. தனிப்பட்ட விசுவாசிகள் செய்வது சபையின் மதிப்பீட்டில் இருக்கிறது. ஒருவருடைய நடத்தையின் விளைவுகள், அந்த தனிப்பட்ட நபர் மற்றும் கர்த்தருக்கு இடையிலான காரியம் மட்டுமே அல்ல. ஒரு கிறிஸ்தவனின் கிரியையானது முழுவதுமாக சரீரத்தையே பாதிக்கிறது.

